**அபி வெனுவென் அபி நிதியம் - 2017**

---

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11(7) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அபி வெனுவென் அபி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்பை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்திக்கமைய தேவைப்படும் போது அல்லது அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள போது தவிர்ந்த சந்தர்ப்பங்களில் வருமானம் மற்றும் செலவினங்கள் எதிரீடு செய்யப்பட கூடாத போதிலும், ரூபா 791,200 தொகையான ரணஜயபுர வியாபாரக் கட்டிடத்தின் கடை வாடகை வருமானத்திற்கு எதிராக ரூபா 34,906 தொகையான விரிவுரை மண்டபத்தின் நீர் மற்றும் மின்சார செலவினம் எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 34,906 இனால் வருமானம் மற்றும் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்கு விடயம்** | **பெறுமதி** | **முன்வைக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | ரூபா | |
| பொது பேரேடு - சீராக்கள் குறிப்புக்கள் | 20,415,806 | பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள் |
| - வழுக்களை சீராக்கும் பதிவுகள் | 2,297,908 | பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள் |
| சிறு உபகரணங்கள் மற்றும் பொறிகள் | 1,064,815 | பட்டோலைகள் |
| சிறு உபகரணம் மற்றும் பொறிகள் பெறுமானத்தேய்வு | 157,445 | பட்டோலைகள் |
| முதலீட்டு வட்டி வருமானம் | 111,132,876 | பட்டோலைகள் |

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 தொடர்பாடல் கம்பனிகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு கோபுர வருமானம் ரூபா 22,695,823 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 1,833,983 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. அந்தப் பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் 454 நலனாளிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 16,218,314 தொகையான தவணைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றுள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைக் கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 7,919,000 ஆகும். நிலுவைத் தவணைகளை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 151,800,000 தொகையான முதலீடு தொடர்பாக நிதி அமைச்சின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 05/2016 | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 8,600,518 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் சிறு உபகரணங்கள் தொடர்பான பௌதீக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்திக்கமைய மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதை இலக்காக கொண்ட செயற்பாடுகள் உள்ளடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 196,813,687 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 103,224,875 ஆனமையால் நிதியத்தின் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 93,588,812 ஆன அதிகரிப்பைக் காட்டியது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 17,482,960 இனால் உயர்வடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 76,105,852 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு வருடங்களினதும் நிதியத்தின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 67,310,121 ஆன மிகையானது, 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 68,264,236 ஆன பற்றாக்குறை வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அது ரூபா 196,813,687 ஆன மிகையொன்று வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீள சீராக்கும் போது நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 68,438,279 ஆன இருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது அந்த பங்களிப்பானது ரூபா 63,644,362 தொகையான மறைப் பெறுமதி வரை ரூபா 132,082,641 இனால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 199,966,878 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------------

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்கு பிரதான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்பு சேவைகளின் அங்கத்தரவர்களுக்கும், மரணமடைந்த அல்லது ஊனமுற்ற அங்கத்தவர்களுக்கான கடன் முன்மொழிவு முறையை உருவாக்குதல், வீட்டு வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை உருவாக்குதல், பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துதல், சான்றுபடுத்துவதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற வேண்டிய போதிலும், அந்த பணிகளுக்காக நிதியத்தின் நிதி பலமானது போதியளவில் பயன்படுத்தப்படாது திறைசேரி உண்டியல்களிலும், அரசிற்கு சொந்தமான வங்கிகளில் நிலையான வைப்புக்களாக நீண்ட காலமாக முதலீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அவ்வாறான ரூபா 1,116,481,719 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) குடியிருப்பு காணிகளை கொள்வனவு செய்தல் / வீடுகளை அமைத்தல் அல்லது புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரசின் பதிவு செய்த நிதி நிறுவனங்களிடமிருந்து இராணுவத்தினர் பெற்றுக்கொண்ட கடனுக்காக கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒரு இராணுவ வீரருக்கு ரூபா 1,000,000 படி 75 இராணுவத்தினருக்கு காசாக 50 சதவீதம் 60 தவணைகளில் மீள அறவிடும் அடிப்படையில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வீடுகளைப் பெற்ற 100 பேருக்கு பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட தமது வீடுகளின் எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்வற்காக வீடொன்றிற்கு ரூபா 250,000 படியான 03 தவணைகளில் ரூபா 750,000 தொகை நிதி உதவிகளாக ஆண்டினுள் வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மானியத் தொகையின் இறுதித் தவணையானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு வீடு பெறுநர்களுக்கும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் பாதீட்டின் பிரகாரம் வெகுமதிகளாக ரூபா 22,300,000 தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் வெகுமதி வருமானம் ரூபா 653,333 ஆன மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் நிதியத்திற்கு பணம் வெகுமதிகளாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

நிதிய இலக்கம் 0074243929 கொண்ட டைமுறைக் கணக்கின் மீதியானது ரூபா 2,704,810 தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வருமானம் உழைக்கும் விளைவுடைய முதலீடொன்றில் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் பீஎவ்/423 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெறுவன் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11(6) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான அறிக்கை இதுவரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தின் கீழ் அபி வெனுவென் அபி நிதியத்திற்காக 02 உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான அறிக்கைகளில் பிரதிகள் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை**

**பெறுகைகள்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 வழிகாட்டிக்கமைய ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதிடப்பட்ட செயற்திட்ட செலவினம் ரூபா 225,000,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 164,491,380 ஆகும். திட்டமிடப்பட்ட ரூபா 60,508,620 தொகை மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிராமையால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது முகாமைத்துவத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | - | பொதுப் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிராமை, கொடுக்கல் வாங்கல்களை இனங்காணல், அறிக்கையிடல், கணக்கேடுகளை நாளது வரையாக்குதல் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை வகைப்படுத்தி பேணுதல் தொடர்பில் குறைபாடுகள் நிலவின. |
| (ஆ) செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை | - | பெறுகை நடவடிக்கை தாமதமாகியமை, நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியமை மற்றும் மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டமை |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | - | நிலுவை தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம் அறவிடப்படாமை, ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் நிலுவை தவணைகளை அறவிடாமை. |